# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137 / 2025

| Deposition of Witness for | Prosecution PW14 |
|---|---|
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **Thiru. Madhan** |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19th day of January, 2026.

**(Accused produced before this court)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 16.15 மணி

நான் தற்போது திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பேரிடர் மேலாண்மை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தின் போது ஊத்துக்கோட்டை வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். மேற்படி வழக்கு

சம்பந்தமாக குற்ற எண் 1/2025 அனைத்து மகளிர் காவல் நிலையம், ஊத்துக்கோட்டை வழக்கு சம்பந்தமாக DSP பாதிக்கப்பட்ட நபர் பூங்கொடி க/பெ. மோகன் மற்றும் எதிரி ராஜா த/பெ. துரைசாமி ஆகியோருக்கு ஜாதிகுறித்த மெய்தன்மை சான்றிதழ் வழங்குமாறு கோரியிருந்தார். அதனடிப்படையில் பூங்கொடி ஏற்கனவே Online மூலமாக பூங்கொடி க/பெ. மோகன் SC, ஆதிதிராவிடர் என்றும் எதிரி ராஜா த/பெ. துரைசாமி மிகவும் பிற்படுத்தப்பட்ட வன்னியர் வகுப்பை சேர்ந்தவர் என்றும் ஜாதி குறித்த மெய்தன்மை சான்றிதழ் வழங்கினேன். பாதிக்கப்பட்ட பூங்கொடி மற்றும் எதிரி ராஜாவுக்கு நான் வழங்கிய ஜாதி குறித்த மெய்தன்மை சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழின் நகல் **அ.த.சா.ஆ.10** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. இதுகுறித்து DSP என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

பட்டியல்இனத்தவருக்கு சாதி சான்றிதழ் வழக்குவதற்கு எனக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். பிற்படுத்தப்பட்டவர்கள் சாத சான்றிதழ் வழங்குவதற்கு மண்டல துணை வட்டாட்சியருக்கு அதிகாரமுள்ளது. பாதிக்கப்பட்ட பூங்கொடி ஏற்கனவே Online மூலமாக சாதி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் தான் சம்பவத்திற்கு பின் வழங்கினேன். அவர் பாலவாக்கம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் விசாரணையின் அடிப்படையில் சான்று வழங்கவில்லை என்றால் சரியல்ல. விசாரணையின் அடிப்படையில் சான்று வழங்கியதற்கான விசாரணை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அலுவலக கோப்பில் இருக்கும். சான்று வழங்குவது ஒரு பணி என்றாலும் சான்று சரிபார்ப்பது மற்றொரு பணி என்றாலும் சரிதான். சான்று வழங்கும்போது தவறாக வழங்கப்பட்டு விட்டால் பின்னால் அதை ரத்து செய்துவிடலாம் என்றால் சரிதான். பட்டியல் இனத்தவர்களுக்கு சாதி சான்றிதழ் சரிபார்ப்பதற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் தனி Committee உள்ளது என்றால் சரிதான். பழங்குடியினருக்கு சாதி சான்றிதழ் சரிபார்ப்பதற்கு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் தனி Committee உள்ளது என்றால் சரிதான். அந்த சரிபார்ப்பு

குழுவிற்கு நான் காவல் துணை கண்காணிப்பாளரின் வேண்டுகோள் கடிதத்தை சரிபார்ப்பு குழுவிற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். அது தேவையில்லை. துணை கண்காணிப்பாளர் மெய்தன்மை குறித்து கேட்டிருந்தார். மெய்தன்மை குறித்து எனக்கு சான்று அளிக்க அதிகாரமில்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137/2025

| Deposition of Witness for | Prosecution PW13 |
|---|---|
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **Thiru. Gnanavel** |
| Father / Husband Name | : Subramanian |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19th day of January, 2026.

**(Accused produced before this court)**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

நேரம் 15.30 மணி

நான் தற்போது ஊத்துக்கோட்டையில் கிராம நிர்வாக அலுவலராக பணிபரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தின்போது நான் சின்னாகரணி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். 06-01-2025 அன்று

சின்னாகரணி ஏரிக்கரைக்கு அருகில் பூங்கொடி க/பெ. மோகன் என்பவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பார் என்றும் மறுநாள் 07-01-2025 அன்று காலை சம்பவம் பற்றி தெரியவந்தது. ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்தார்கள். எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்குவதற்கு சாட்சியாக இருக்க என்னை அழைத்தார்கள். அதனடிப்படையில் நானும், கிராம உதவியாளர் அவர்களும் ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையம் சென்றோம். முதலில் ராஜா சின்னாகரணி கிராமத்தை சேர்ந்தவர் என்பதை கிராம உதவியாளரை விசாரித்து உறுதி செய்துகொண்டேன். பின்னர் 07-01-2025 இரவு 10.00 மணிமுதல் 11.30 மணிவரை எதிரி ராஜா த/பெ. துரைசாமி என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனடிப்படையில் எதிரி ராஜா தனது வீட்டில் கிழக்கு பக்கமாக உள்ள சுவரில் ஒரு புளூ நிற டவுசர் மற்றும் ரோஸ் கலர் டீசர்ட், வெள்ளை நிற பேண்ட் ஆகியவற்றை போலீசார் என் முன்னிலைலை கைப்பற்றினார்கள். நான் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பமிட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியிடமிருந்து Blue Colour Platina இருசக்கர வாகனமும் மற்றும் ஒரு Lava செல்போனும் காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். எதிரியின் உடைகளை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Blue Colour Platina இருசக்கர வாகனமும் மற்றும் ஒரு Lava செல்போன் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றுதல் மகஜர்களில் முதலாவதாக சாட்சி கையொப்பமிட்டுள்ளேன். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுகிறது. எதிரியின் உடை ஒரு புளூ நிற டவுசர் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரோஸ் கலர் டீசர்ட் **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வெள்ளை நிற பேண்ட் **அ.சா.பொ.3**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. Blue Colour Platina இருசக்கர வாகனத்தின் (TN 20 CQ 8934) புகைப்படம் **அ.சா.பொ.4 (3 எண்ணிக்கைகள்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Lava செல்போன் **அ.சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய சொந்த ஊர் திருப்பூர் மாவட்டம் என்றால் சரிதான். 06-01-2025 க்கு முன்னர் நான் எத்தனை ஆண்டுகளாக சின்னாகரணி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் ஒரு வருடமாக பணிபுரிந்து வருகிறேன். கிராம நிர்வாக அலுவலர் என்ற அடிப்படையில் பணி பற்றிய Handbook பராமரிப்பேன் என்றால் சரிதான். எங்கள் கிராமத்தில் நடைபெறக்கூடிய அசாதாரண நடவடிக்கைகள் குறித்து நான் தான் காவல் துறைக்கு தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் 2025 சுற்றறிக்கைப்படி கிராம நிர்வாக அலுவலர்கள் அந்ததந்த கிராமத்தில் தங்கி பணிபுரிய வேண்டும் என்றால் சரிதான். சின்னாகரணி கிராமத்தில் எனக்கு அரசு குடியிருப்பு இல்லாததால் நான் ஊத்துக்கோட்டையில் தங்கியிருந்தேன். எங்களுக்கு Movement Register உள்ளது என்றால் சரிதான். 06-01-2025 அன்று நடந்த சம்பவம் குறித்து எனக்கு எத்தனை மணிக்கு தெரிந்தது என்றால் 07-01-2025 அன்று தான் தெரியவந்தது. 06-01-2025 அன்று நான் கிராமத்தில் இல்லையா என்றால் கிராமத்தில் தான் இருந்தேன். அன்றைய தினம் கிராமத்தில் நடந்த சம்பவம் தெரியாது என்றால் அன்றைய தினம் எனக்கு தெரியாது. 07-01-2025 அன்று காலையிலேயே தெரியவந்தது. நான் சம்பவம் பற்றி தெரியவந்தவுடன் பாதிக்கப்பட்டவர்களை விசாரணை செய்தேனா என்றால் பாதிக்கப்பட்டவர் யார் என்று விசாரணை செய்தேன். பாதிக்கப்பட்டவரின் வீட்டிற்கு சென்று விசாரிக்கவில்லை. 07-01-2025 அன்று போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். யாருக்கு எதிராக வழக்கு பதிவு செய்தார்கள் என்ற விவரம் அன்றையதினம் எனக்கு தெரியுமா என்றால் குற்றவாளி யார் என்று

எனக்கு அன்று தெரியாது. குற்றவாளியை யார் என்று உறுதிபடுத்தவில்லை. ராஜா என்பவர் மீது வழக்கு பதிவுசெய்திருப்பதாக 07-01-2025 அன்று மதியம் தெரியவந்தது. அன்றைதினத்தில் போலீசார் எதிரியை எத்தனை மணிக்கு, எங்கு வைத்து கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த இடத்திலிருந்து இருசக்கரவாகனமும், Lava செல்போனையும் எடுத்துக்கொண்டு காவல்நிலையம் வந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து தான் பார்த்தேன். காவல் நிலையத்திற்கு என்னை வருமாறு போலீசார் எனக்கு சம்மன் கொடுத்தார்களா என்றால் இல்லை. போனில் தான் அழைத்தார்கள். காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அழைத்தார்களா அல்லது ஊத்துக்கோட்டை மகளிர் காவல் நிலையத்திற்கு அழைத்தார்களா என்றால் நான் முதலில் ஊத்துக்கோட்டை காவல் நிலையம் சென்றேன். பின்னர் ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையம் செல்ல சொன்னார்கள். பின்னர் அங்கு சென்றேன். மகளிர் காவல் நிலையத்தில் Lockup வசதி கிடையாது என்பதால் மாலை 05.00 மணிக்கு மேல் யாரையும் வைத்திருக்க மாட்டார்கள் என்றால் சரிதான். நான் ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் எதிரியை பார்த்தேனா என்றால் இல்லை. இருசக்கர வாகனத்தையும், செல்போனையும் ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பார்த்தேன். காவல் நிலையத்தில் மகஜர் தயார் செய்தபோது நான் சென்றபோது என்னுடன், கிராம உதவியாளரையும் அழைத்து சென்றேன் என்றால் சரிதான். நான் சென்றபோது Lava செல்போனை என்னிடம் யார் காண்பித்தார்கள் என்றால் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்த போலீசார் என்னிடம் காட்டினார்கள். அங்கு DSP இருந்தார். இருசக்கர வாகனம் காவல் நிலையத்தில் எங்கு வைக்கப்பட்டிருந்தது என்றால் காவல் நிலையத்தின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. போலீசார் விசாரணையின் இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் செல்போன் குறித்து கூறவில்லை என்றால் நான் கூறவில்லை. அன்றைய தினம் இரவு நேரத்தில் காலை முதல் மாலை வரை என் அலுவலகத்தில் இருந்தபோதும் இரவு நேரம் காவல் நிலையம் செல்ல குறிப்பிட்ட

காரணம் ஏதேனும் உள்ளதாக என்றால் போலீசார் வர கூறியதன் அடிப்படையில் சென்றேன். போலீசார் என் முன்னிலையில் அன்றைய தினம் இரவு எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 10.00 மணிக்கு விசாரித்தார்கள். போலீசார் விசாரிக்கும்போது எதிரி எப்படி இருந்தார் என்றால் புளூ நிற டி–சர்ட் அணிந்திருந்தார். காலில் கட்டுபோட்டிருந்தார். அன்றைய தினம் எதிரிக்கு காயம் எப்படிபட்டது என்பது குறித்து என் முன்னிலையில் ஏதாவது கூறினாரா என்றால் போலீசார் விசாரிக்கும்போது கூறினார். காயம்பட்ட பின்னர் காவல் நிலையத்தில் எதிரியை எந்த இடத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒரு ரூமில் வைத்து விசாரித்தார்கள். நான் கையொப்பம் செய்த ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்ததா என்றால் சொல்ல சொல்ல குறித்துக் கொண்டார்கள். செல்போன் மற்றும் இருசக்கர வாகனத்தையும் போலீசாரிடம் எதிரி எடுத்து ஆஜர் செய்வதற்கு வாய்ப்பில்லை என்றால் சரிதான். போலீசாரே எடுத்துக் கொண்டார்கள். போலீசார் குறிப்பு எடுக்கும்போது எதிரியின் வீட்டின் பின்புறமுள்ள சுவரில் என்று கூறினாரா என்றால் என்னை எதிரியின் வீட்டிற்கு வர சொன்னார்கள். போலீசார் எனக்கு முன்பாக ஜீப்பில் வேகமாக சென்றுவிட்டார்கள். நான் சுமார் 10 நிமிடம் கழித்து சென்றேன். எதிரியின் வீட்டிற்கு நான் சென்றபிறகு தான் கைப்பற்றினார்கள். நான் செல்லும்போது போலீசார் எதிரியின் வீட்டிற்கு முன்னால் நின்றுகொண்டிருந்தார்கள். நான் போலீசாருடன் எதிரியின் வீட்டிற்கு பின்னால் சென்றேன். எதிரியின் உடைகளை கைப்பற்றிய பிறகு என்னை காவல் நிலையம் வர கூறினார்களா என்றால் அங்கேயே வைத்து எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். உடைகளை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையொப்பம் எதிரியின் வீட்டில் வைத்து வாங்கினார்கள். எதிரியின் இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை

மணிக்கு தயார் செய்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அரைமணி நேரத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முழு விவரம் டைப் செய்யப்பட்டுள்ளதா என்றால் எதிரி கூறியதை நான் கேட்டேன். கம்ப்யூட்டரில் டைப் செய்யப்பட்டுள்ளதா என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டேன். எதிரி கூறியது ஒப்புதல் வாக்குமூலம் டைப் செய்யப்பட்டிருந்தது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டிய எதிரியின் ஆடைகளை பார்த்தேன். மற்ற கைப்பற்றப்பட்ட ஆடைகளை நான் பார்க்கவில்லை. காவல் துறையின் புலன்விசாரணைக்கு VAO என்ற முறையில் நான் உதவியாக இருக்க வேண்டும் என்றால் சரிதான். காவல் துறையினர் பதிவு செய்த வழக்குகளில் குற்ற வாளிகள் யார் என்று தெரிந்த வழக்குகளில் VAO க்கள் காவல் துறையினருக்கு உதவியாக ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்யக்கூடாது மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு குறித்து 07-01-2025 அன்று காலை தெரியவந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 06-01-2025 அன்று மாலையே அடையாளம் தெரியாத 40 வயதுதக்க நபரால் பாதிக்கப்பட்ட பெண் பாலியன் வன்கொடுமை செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால்சரியல்ல. எனக்கு தெரியவில்லை என்றாலும் எனது அலுவலக உதவியாளருக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரி மீது போலீசார் போட்ட பொய் வழக்கு என்பதால் VAO ஆகிய நான் சாட்சியாக இருக்க வேண்டும் என்று போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 08-01-2025 அன்று தான் நான் கிராமத்திற்கு வந்தேன் என்றாலும் அதை Movement Register உறுதி படுத்தும் என்றால் சரியல்ல. 07-01-2025 அன்று நான் ஊத்துக்கோட்டை தாலுக்கா அலுவலகத்தில் பணியாற்றியதை Movement Register உறுதி படுத்தும் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137/2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW12<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : **Thiru. Gunaseelan** |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19th day of January, 2026.

**(Accused produced before this court)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 15.25 மணி

நான் தற்போது சின்னாகரணி கிராமத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. DSP சின்னாகரணி கிராமத்திற்கு வந்தார்கள் அப்போது நான் வேலைக்கு செல்வதற்காக கிளம்பிக் கொண்டிருந்தேன். DSP

என்னிடம் கையொப்பம் கேட்டார் நான் கையொப்பம் போட்டேன். பார்வை மகஜரில் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் போலீசார் விசாரணையில் கடந்த 07-01-2025 ஆம் தேதி சுமார் காலை 7.00 மணிக்கு இந்த வழக்கு சம்பந்தமாக ஊத்துக்கோட்டை DSP அவர்கள் என் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் அதில் நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த சம்பத் சாட்சியாக கையொப்பமிட்டதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பார்வை மகஜரில் என்ன எழுதியதிருந்தது எனக்கு தெரியமா என்றால் தெரியாது.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137/2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW11<br>Defence<br>Court |

Name : Dr.Vinodhini

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19th day of January, 2026.

**(Accused produced before this court)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.50 மணி

நான் தற்போது திருவள்ளூர் அரசு மருத்துவ கல்லூரியில் மகப்பேறு பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 06.01.2025 அன்று அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நான் 24 மணி நேர பணியிலிருந்த போது அன்று

இரவு 7.00 மணியளவில் பூங்கொடி வ/54 என்பவரை அகிலா மற்றும் நீலாவதி என்பவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள். அன்றைய தினம் 4.00 மணியளவில் சென்னாகரணி ஏரிக்கரையில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் தன்னை பாலியல் தாக்குதல் நடத்தியதாக கூறினார். அந்த நபர் அவரை இழுத்து புதரில் தள்ளி மரக்கட்டை கொண்டு அடித்തததாகவும் அவர் மேலே படுத்து பலாத்காரம் செய்ததாகவும் பின்னர் ஓடிவிட்டதாகவும் கூறினார். அருகில் இருந்த நபர்கள் அவர் மகள் அகிலாவிடம் விவரம் தெரிவித்து அவருக்கு பிறப்புறுப்பில் உதிர போக்கு இருந்ததால் அவரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்தார்கள். அவரை பரிசோதனை செய்யும் அவர் அதிர்ச்சி அடைந்த நிலையில் இருந்தார். அவர் மெதுவாகவும் தயக்கத்துடனும் பதில் அளித்தார். அவருக்கு உதட்டில் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. பிறப்புறுப்பில் 5x0.5 cm அளவில் சிராய்ப்பு காயம் மற்றும் சிறிய சிராய்ப்பு காயங்கள் நிறைய காணப்பட்டது. பிறப்புறுப்பிலிருந்து ஆசனவாய் வரை சிதைந்த காயம் இருந்தது. பிறப்புறுப்பின் உள்பகுதியில் 5cm சிதைந்த காயம் காணப்பட்டது. உதிரபோக்கு இருந்ததால் அறுவை சிகிச்சை அறையில் மயக்க மருந்து அளித்து காயங்களுக்கு சிகிச்சை அளித்தோம். மேற்படி நான் அளித்த விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பாதிக்கப்பட்டவருக்கு நான் அளித்த சான்றிதழ் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே மருத்துவமனையில் பூங்கொடி 8 நாட்களாக இருந்து சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் பதிவுசெய்த விபத்து பதிவேட்டில் வழக்கு பற்றிய விவரம் கூறியது அகிலாவின் மகள் நீலாவதி என்றால் அந்த விவரத்தை பூங்கொடி மற்றும் அவரது மகள் அகிலா கூறினார். விபத்து பதிவேட்டில் இருவரும் சேர்ந்து கூறினார்களா என்று உள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட பாதிக்கப்பட்ட நபர் முழு சுயநினைவுடன் இருந்தாரா என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் பாதிக்கப்பட்ட நபர் சுயநினைவுடன் இருந்தாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். அவர் தன்னை தெரியாத நபர் வந்து

சம்பவத்தின் போது தாக்கியதாக கூறியுள்ளேன் அந்த நபர் தன்னை உடல் முழுவதும் கட்டையால் அடித்ததாக கூறியதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் அவர் கூறியபடி கட்டையால் அடித்த காயம் உடல் முழுவதுமாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் காயங்கள் இல்லை. விபத்து பதிவேட்டின் போது பாதிக்கப்பட்ட நபர் அவரை அடையாளம் தெரியாத நபர் கற்பழிக்க முயற்சி செய்து பின்னர் ஓடிவிட்டதாக கூறியுள்ளார் என்றால் முயற்சி செய்ததாக கூறினார். ஆனால் சிதைந்த காயங்கள் இருந்ததாக பரிசோதனையில் தெரியவந்தது. பாதிக்கப்பட்ட நபருக்கு மாதவிடாய் பற்றிய விவரங்கள் எதுவும் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவருக்கு சில வருடங்களுக்கு முன்பதாக கர்ப்பை அகற்றபட்டுள்ளது. அதனால் அவருக்கு மாதவிடாய் ஏற்பட வாய்ப்பில்லை. அதை பற்றிய விவரங்கள் என்னுடைய மருத்துவ பரிசோதனையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் விபத்து பதிவேட்டில் 2 வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளேன். மருத்துவ சிகிச்சையின் போது அவருக்கு உதிரபோக்கு நின்று இருந்ததா அல்லது எவ்வளவு நேரம் உதிரபோக்கு இருந்ததாக சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டார் என்றால் வரும் போது உதிரபோக்குடன் வந்தார். உதிரபோக்கு நிற்கவில்லை ஆகவே அறுவை சிகிச்சை அறையில் வைத்து மயக்க மருந்து கொடுத்து தையல் போட்டோம். அறுவையின் சிகிச்சையின் போது உள்ளே Posterior Vaginal vault அருகில் 3 cm கிழிந்த காயம் இருந்ததை பார்த்தேன். விபத்து பதிவேட்டின் போது அதை குறிப்பிடவில்லை. மருத்துவபரிசோதனையின் போது அந்த காயம் என்னால் கண்டுபிடிக்கப்பட்டதா என்றால் ரொம்ப ஆழத்தில் இருந்தது. பாதிக்கப்பட்ட நபர் மிகுந்த வலியுடன் இருந்ததால் விபத்து பதிவேட்டிற்காக பரிசோதனை செய்யும் போது அதை பார்க்கமுடியவில்லை. கருப்பை வாய் அளவிற்கு ஸ்கேனர் கருவிகள் மூலம் பரிசோதனை செய்யலாம் என்று தெரியும் என்றால் மேற்படி காயம் ஸ்கேனில் தெரியாது. அவருக்கு நான் குறிப்பிட்டுள்ள வெளிப்படையான சிராய்ப்பு காயங்கள் இரண்டும் தவறி கீழே விழும் போது ஏற்பட வாய்ப்புண்டா என்றால் இல்லை. புதர் பகுதிகளில் அவர் நுழைந்து போகும் போது அது போன்ற காயங்கள் ஏற்பட

வாய்ப்புண்டா என்றால் இல்லை. இந்த வழக்கில் எனக்கு Guidelines ல் கொடுத்துள்ளது போல சம்பந்தப்பட்ட நபரை விசாரணை செய்து அவரிடமிருந்து 42 கேள்விகள் கேட்டு விவரங்கள் பதிவுசெய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் வரிசை எண்.16 ல் பாதிக்கப்பட்ட நபர் அவரை அடையாளம் தெரியாத நபர் 4.00 மணியளவில் அவரிடம் பாலியல் வன்புணர்வு செய்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். அவருக்கு வன்புணர்வு செய்யப்பட்ட நேரம் 4.00 மணி என்பது தோரயமான நேரம் என்று நான் மருத்துவ பரிசோதனையின் போது உறுதி செய்தேனா என்றால் பாதிக்கப்பட்ட நபர் 4.00 மணி என்று கூறியுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அந்த நேரத்தில் ஏற்பட்டது போல் ஒத்தியிருந்தது. அது சம்பந்தமாக மருத்துவ கருத்துரை எதாவது கொடுத்துள்ளேனா என்றால் நேரம் குறிப்பிடவில்லை சமீபத்திய காயம் என்று குறிப்பிட்டுள்ளேன். சமீபம் என்றால் எவ்வளவு நேரம் என்று குறிப்பிடவில்லை. அவருக்கு அறுவை சிகிச்சைக்கு பின்பு அவரை விசாரணை செய்து அ.த.சா.ஆ.5 பதிவு செய்தேனா என்றால் அறுவை சிகிச்சைக்கு முன்பு பதிவு செய்தேன். வரிசை எண்.39 ல் நான் கொடுத்த விபத்து பதிவேட்டின் படி அவருக்கு சிராய்ப்பு காயம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சிராய்ப்பு காயம் குறித்து குறிப்பிடவில்லை. கிழிந்த காயம் குறித்து குறிப்பிட்டுள்ளேன். அவருடைய பிறப்புறுப்பிலிருந்து Vaginal smear & Labial Smear எடுத்துள்ளேன் என்றால் சரிதான். Labial எந்த பகுதி என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் எடுத்த smear test முடிவை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதனுடைய result negative என வந்தது.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.